வியாபாரிகளே
உங்களுக்குத்தேவையான
★ அழகு சாதன
பொருள்கள்
★ தையல் பொருள்கள்
★ பாடசாலை
உபகரணங்கள்
பெற்றுக்கொள்ள!
ஜெயா அழகு மாடம்
177, மின் நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்! ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

★ எவர்சில்வர்
★ விளையாட்டுப்
பொருள்கள்
★ பிளாஸ்டிக்
பொருள்கள்
பெற்றுக்கொள்ள!
ஜெயா அழகு மாடம்
177, மின் நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆவணி, 25 சனிக்கிழமை (10 - 09 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 287

# ஐ.தே.க தலைவர் பதவியிலிருந்து விஜேதுங்கா ராஜினாமா!

## ஜனாதிபதி வேட்பாளராக காமினி

கொழும்பு செப். 10

ஐ. தே. க தலைவர் பதவியில் இருந்து டி. பி. விஜேதுங்கா நேற்று ராஜினாமாச் செய்தார்.

இதனை அடுத்து காமினி திஸநாயக்கா தலைவர் பதவியை ஏற்கவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

பதவி துறந்த டி. பி. விஜேதுங்கா, ஜனாதிபதி தேர்தலில் ஐ. தே. க. வேட்பாளராக காமினி திஸநாயக்காவே போட்டியிடுவார் என்று நேற்று அறிவித்தார்.

இவரது ராஜினாமாவுக்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்று இந்திய வானொலி நேற்றிரவு தெரிவித்தது.

கட்சித் தலைவர் பதவியில் இருந்து விஜேதுங்கா விலகினாலும் புதிய ஜனாதிபதி ஒருவர் பதவி ஏற்கும் வரை அவரே ஜனாதிபதியாகப் பதவி வகிப்பார். (இ)



## டி. பியின் ஆலோசகர் வெளியேறினார்

கொழும்பு, செப். 10

ஜனாதிபதி விஜேதுங்காவின் விசேட ஆலோசகராக தேர்தல் காலத்தில் பணிபுரிந்து வந்த டாக்டர் விக்ரம வீரசூரிய கடந்த ஞாயிறு சிங்கப்பூர் ஊடாக அவுஸ்திரேலியாவுக்குப் பயணமானார். (ஐ எ)



# கடற்படையினர் தாக்குதலில் அளம்பில் தேவாலயம் சேதம்

யாழ்ப்பாணம், செப். 10

மணலாறு கடற்பகுதியில் இருந்து கடந்த புதனன்று கடற்படையினர் நடத்திய பீரங்கித் தாக்குதலினால் அளம்பிலில் உள்ள தேவாலயம் ஒன்று சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

படையினர் ஏவிய பீரங்கிக் குண்டுகள் தேவாலயத்தின் சுற்றுப்பகுதிகளில் விழுந்து வெடித்தன. இதனால் தேவாலயம் சேதமடைந்தது.

இதேவேளை —

மணலாறு கடற்பகுதியில் தொழிலில் ஈடுபடும் சிங்கள மீனவர்களுக்கு கடற்படைகள் பாதுகாப்பு அளித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-ஐ)

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், செப். 10

கிளாலி - பூநகரிப் படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஒ-3)

## நெடுங்கேணி தாக்குதலில் ஒரு சிப்பாயைக் காணோம்

கொழும்பு, செப். 10

வவுனியா, நெடுங்கேணிப் பிரதேசத்தில் பதியாகுளக்கட்டுப்பகுதி இராணுவ முகாம் மீது செவ்வாய் இரவு விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின் போது சிப்பாய் ஒருவர் காணாமற்போய்விட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதும் விடுதலைப்புலிகளினால் ஆயுதங்கள் பல கைப்பற்றப்பட்டதும் தெரிந்தவையே. இத்தாக்குதலை, சிறிய சம்பவம் என்று பாதுகாப்பு அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்ததாக ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது—

குடியேற்றப்பட்ட சிங்களவர்களுக்குப் பாதுகாப்பு வழங்

[6 ஆம் பக்கம் பார்க்க]

# கேரதீவு - சங்குப்பிட்டி பாதையை திறக்க உயர்மட்டத்தில் யோசனை

## விரைவில் முடிவு தெரியவரும்

கொழும்பு, செப்டெம்பர் 10

வடபகுதி மக்களின் பிரயாணக் கஷ்டத்தைப் போக்குமுகமாக, சங்குப்பிட்டி – கேரதீவு பாதையைத் திறந்து விடுவது குறித்து அரசாங்க உயர்மட்டத்தில் இப்போது மிகத் தீவிரமாக ஆராயப்பட்டு வருகிறதாம்.

பொருளாதாரத் தடைத் தளர்வு நடைமுறையில் பயன் அளிப்பதற்கு போக்குவரத்துத் தடையும் நீக்கப்பட வேண்டும் என்பதில் பிரதமர் சந்திரிகா ஆர்வமாக உள்ளதால் —

முதற் கட்டமாக சங்குப்பிட்டி – கேரதீவு பாதை திறக்கப்படும் என்று கொழும்பில் அரச சார்பு (லேக் ஹவுஸ்) பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

முந்திய அரசாங்கம் விதித்த போக்குவரத்துத் தடையின் காரணமாக வடபகுதி மக்கள் பெரும் சிரமங்கள், கஷ்டங்களின் மத்தியில் கிளாலி ஊடாகவே பிரயாணம் செய்கிறார்கள்.

யாழ் குடாநாட்டுக்கு வெளிமாவட்டங்களில் இருந்து பாவனைப் பொருள்களைக் கொண்டு வருவதிலும் பெரும் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது.

இந்தக் கஷ்டங்களைப் போக்குவதன் பொருட்டு, முதற்கட்டமாக கேரதீவு — சங்குப்பிட்டி பாதையைத் திறந்து விடுவது குறித்து உயர் மட்டத்தில் இப்போது தீவிரமாக ஆராயப்பட்டு வருகிறது.

பூநகரியில் இப்போது சிறிய சினவில் அமைந்துள்ள இராணுவ முகாமை அகற்றிவிட்டு கேரதீவு — சங்குப்பிட்டி பாதையைத் திறப்பதா, அல்லது அதனை அகற்றாமலே திறப்பதா என்பது குறித்த சாதக பாதகங்கள் ஆராயப்படுவதாகவும் தெரிய வருகிறது.

பூநகரிப் பாதை திறக்கப்பட்ட பின்னர் ஆனையிறவுப் பாதையைத் திறந்து விடுவது குறித்து ஆராயப்படுமென்றும் கொழும்புப் பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-3)

## கொழும்புத்துறைமுகத்தில் விபத்து:

## ‘ஹபரண’ கப்பல் மோதி இறங்குதுறை பெரும் சேதம்

கொழும்பு, செப். 10

வடக்கிற்கு பொருள்களை ஏற்றிவரும் கப்பல்களில் ஒன்றான ஹபரண கடந்த 6 ஆம் திகதி கொழும்புதுறை முகத்தில் விபத்துக்கு உள்ளானது.

வடக்கிற்கான மா, சீனி, அரிசி ஆகிய பொருள்களை ஏற்றிக் கொண்டு கொழும்புதுறை முகத்திலிருந்து புறப்பட்ட சமயமே இவ்விபத்து ஏற்பட்டது.

இதனால் இறங்குதுறையின் நீளப்பகுதி உடைந்து கடலில் விழ்ந்தது. இதனால் 1 கோடியே 50 லட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டது என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் கப்பலுக்கோ, பொருள்களுக்கோ சேதமெதுவும் ஏற்படவில்லை.

கப்பலை திருப்ப முயற்சித்தபோது கப்டனின் தவறான வழிநடத்துதலாலேயே இந்த விபத்து சம்பவித்தது எனச் சொல்லப்படுகிறது. (ஓ - 9)

## கப்பல் தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம், செப். 10

"ஹபரண" கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அறியவருகிறது.

இறங்கு துறைக்கு ஏற்பட்ட சேதத்திற்கு நட்டஈடு வழங்கும் வரை கப்பலை எடுக்க வேண்டாம் என்று உத்தரவிடப்பட்டுள்ளதாகத் தெரியவந்தது.

வடக்குக்கு உரம் ஏற்றிவரும் பணியில் ஈடுபட்டு வந்த "ருஹுணு" கப்பலுக்குப் பதிலாக இக்கப்பல் குத்தகைக்கு எடுக்கப்பட்டதும் —

முதல் தடவையாக இம்முறையே இக்கப்பல் வடக்கு நோக்கி வரவிருந்ததும் — குறிப்பிடத்தக்கன. (ஒ-3)

## பூநகரிப் பகுதியில் 3 சிப்பாய்கள் பலி

### ஐவர் காயம்

கொழும்பு, செப். 10

பூநகரி இராணுவ முகாம் பகுதியில் விடுதலைப் புலிகளுடனான மோதலில் படையினர் தரப்பில் மூவர் உயிரிழந்தனர் என்றும் ஐவர் காயமடைந்தனர் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவ நிலைகள் மீது போராளிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்துவர் என பாதுகாப்பு வட்டாரங்கள் எதிர்பார்ப்பதாக "வெரித்தாஸ்" வானொலி தெரிவித்தது. (இ-ஐ-6)

## திட்டமிட்டு நடத்திய தாக்குதல் அல்லவாம்

கொழும்பு. செப். 10

பூநகரியில் விடுதலைப் புலிகளுக்கும் ஆயுத படையினருக்கும் இடையே ஏற்பட்ட மோதல் தற்செயலாக இடம்பெற்ற சாதாரண சம்பவம் என்றும் —

எவரும் திட்டமிட்டு நடத்திய தாக்குதல் அல்ல என்றும் —

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் செமுனு குலதுங்க தெரிவித்தார்.

இத்தகைய துரதிர்ஷ்ட சம்பவங்களைத் தவிர்ப்பதற்காக இரு தரப்பினருக்கும் இடையில் விரைவாக உத்தியோகபூர்வ யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவது அவசியமாகின்றது என்றும் பிரிகேடியர் குலதுங்க பி.பி.ஸி. சிங்கள சேவைக்குத் தெரிவித்தார். (இ-எ-6)

## யாழ்.பல்கலைக்கழகத்தில் 642 மாணவருக்கு இன்று பட்டமளிப்பு

யாழ்ப்பாணம், செப். 10

இன்று சனிக்கிழமை நடைபெறும் யாழ். பல்கலைக்கழகத்தின் 14 ஆவது பட்டமளிப்பு விழாவில் 642 பட்டதாரிகளுக்கு பட்டமளிக்கப்படும்.

161 பேருக்கு கலைமாணிப்பட்டமும் 35 பேருக்கு தொழில் நிர்வாகமாணி பட்டமும், 75 பேருக்கு வர்த்தகமாணிப்பட்டமும் 58 பேருக்கு மருத்துவசத்திரசிகிச்சை மாணிப்பட்டமும் —

25 பேருக்கு இசைக் கலைமாணிப்பட்டமும், 9 பேருக்கு நாட்டிய கலைமாணிப் பட்டமும், 2 பேருக்கு இசைக்கலை மாணிப்பட்டமும், 149 பேருக்கு விஞ்ஞான மாணிப்பட்டமும் 8 பேருக்கு சித்தமருத்துவ சத்திர சிகிச்சை மாணிப்பட்டமும் வழங்கப்படும்.

பட்டப்பின் பட்டங்களின் வரிசையில் ஒருவருக்கு கலாநிதிப்பட்டமும், இரண்டு பேருக்கு முது விஞ்ஞான மாணிப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இருவருக்கு தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், செப். 10

யாழ். பல்கலைக்கழகத்தின் மறைந்த துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா ஞாபகார்த்தமாக முதல் தடவையாக வழங்கப்பட உள்ள தங்கப்பதக்கத்திற்கு இம்முறை யாழ். பல்கலைக்கழகத்தில் இரு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கலைப் பீடத்திலிருந்து செல்வன் ஜோசப் சந்தியோ மைக்கல் கொலின்ஸ், விஞ்ஞான பீடத்திலிருந்து செல்வன் முருகையா முரளீதரன் ஆகியோரே தெரிவு செய்யப்பட்டவர்கள் ஆவர்;

பேராசிரியர் அ. துரைராசா ஞாபகார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தங்கப்பதக்க நிதியத்தில் தற்போது ஒன்றரை லட்சம் ரூபா கையிருப்பில் இருக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

நான்கு பீடங்களுக்கும் தலா ஒரு தங்கப்பதக்கம் வழங்குவதற்கு முடிவு செய்திருந்த போதும், கலை, விஞ்ஞான பீடங்கள் தவிர்ந்த ஏனைய பீடங்களிலிருந்து எவரும் இதற்கு தகுதியாக இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-4)

# சுன்னாகத்திலும் சாவகச்சேரியிலும் 2 ஜெனரேட்டர்களை இயக்க முயற்சி

கொழும்பு, செப். 10

யாழ் குடாநாட்டுக்கு இரு ஜெனரேட்டர்களை அனுப்புவதுபற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது என்று அரச சார்பு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஒரு ஜெனரேட்டரை சுன்னாகத்திலும், மற்றைய ஜெனரேட்டரை சாவகச்சேரியிலும் நிறுவ உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பிரதான நீர் மின்சாரத்தை மீண்டும் பயன்படுத்தக் கூடிய நிலை வரும் வரை இந்த ஜெனரேட்டர்கள் மூலம் முக்கிய பகுதிகளுக்கு மின்சாரம் வழங்க முடியும் என்று மின்சார சபையினர் தெரிவித்துள்ளனர்.

## நீர்மின்விநியோகம் கிடைக்க ஆறுமாதங்கள் செல்லுமாம்

இதற்கிடையில் வட பகுதியில் சேதமடைந்துள்ள மின் விநியோக அமைப்புகளைச் சீர் செய்வதற்கு குறைந்தது 6 மாத காலம் தேவைப்படும் என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

தேசிய மின் விநியோகத் திட்டத்தின் மூலம் வட பகுதிக்கு மின் விநியோகத்தை வழங்க கூடுதலான காலம் செல்லலாம் என்பதினாலேயே சுன்னாகத்திலும், சாவகச்சேரியிலும் இரு ஜெனரேட்டர்களைப் பொருத்தி மின்சாரம் வழங்குவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறதாம். (இ-ஐ)

## முச்சந்தி முரளி



"காமினி வந்துவிட்டார். அநுராவுக்கு ஜாதக பலன் எப்படியோ?

# ராணுவச்சதி குறித்து விசாரிக்க ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, செப். 10

தேர்தல் தினத்தன்று இடம் பெறவிருந்ததாகக் கூறப்பட்ட இராணுவச்சதி பற்றி முழு அளவிலான விசாரணை நடத்தும் படி ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா உத்தரவிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரகசியப் பொலிஸ் திணைக்களத்தின் பிரதி பொலிஸ்மா அதிபர் திரு. அமரசேன ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதியின் உத்தரவு கடிதம் எழுத்து மூலம் அறிவித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சதியில் சம்பந்தப்பட்டிருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இராணுவத் தலைமை நிர்வாக அதிகாரி மேஜர் ஜெனரல் லக்கி அலகம, பிரிகேடியர் சரத் பொன்சேகா, கேணல் காமினி குணசேகரா உட்பட மற்றும் சிலர் ஜனாதிபதிக்கு அனுப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கப்டன் கதிரவனின் உருவப்பட ஊர்வலம்

யாழ்ப்பாணம், செப். 10

கடந்த 4 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டத்தில் படையினருடன் இடம்பெற்ற நேரடி மோதல் சம்பவத்தில் வீரகாவியமான துணைப் பொறுப்பாளர் கப்டன் கதிரவன் என்னும் ஜோசப் ஜேசுதாசன் பிறேமன் இருபைகுமார்— 5 ஆம் வட்டாரம் எழுவைதீவு) வீரச்சாவடைந்தார்.

வித்துடல் கிடைக்காததால் அவரது உருவப்பட ஊர்வலமும் இறுதி வீரவணக்கமும், நினைவுக்கல் நடுகையும் இன்று இடம்பெறவுள்ளன.

கொய்யாத் தோட்டத்தில் உள்ள அவரது தற்போதைய இல்லத்தில் இருந்து இன்று நண்பகல் 12.30 மணியளவில் உருவப்பட ஊர்வலம் ஆரம்பமாகும்.

சகல இராணுவ மரியாதைகளுடனும் எடுத்துச் செல்லப்படும் உருவப்படம் ஐந்து சந்தியில் உள்ள சார்ள்ஸ் பாபர் பாடசாலையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

பின்னர் உருவப்படம் தென்மராட்சி நோக்கிச் செல்லும். அங்கு கெற்பெலி பண்டிதர் குடியிருப்பில் மக்களின் இறுதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தில் கடமைபுரியும்
செல்வி ந. சிறிதேவியின்
அன்புத் தந்தையார்

**திரு. செல்லப்பா நடராஜா**
அவர்களின்

மறைவினால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உரிமையாளர்களும், அலுவலர்களும்,
யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கம்.
183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி. (சி/9088)



## சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
## Dr. தில்லையம்பலம் பயிற்சி நிலையம்

பயிற்சி நெறிகள் ஆரம்பம்:
**12 – 09 – 94**

தட்டெழுத்து — ஆங்கிலம் / தமிழ்
சுருக்கெழுத்து — ஆங்கிலம் / தமிழ்
மனைப் பொருளியல் — டிப்ளோமா - 1 வருடம்

பயிற்சி வார நாட்களிலும் சனிக்கிழமையிலும் நடத்தப்படும்.

ஆர்வமுள்ள மாணவர்கள் மேற்படி பாடசாலை அலுவலகத்தில் மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ளவும்.

பயிற்சி முடிவில் தராதரப்பத்திரம் வழங்கப்படும்.

(சி-9085) — அதிபர்.


## வீரச்சாவு

யாழ்ப்பாணம், செப் 10

யாழ் மாவட்டத்தில் கடந்த 4 ஆம் திகதி ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த நேரடி மோதல் ஒன்றில்—

தீவகக் கோட்ட துணைப் பொறுப்பாளரான கப்டன் கதிரவன் அல்லது ஜோக்கின் (ஜெகதாசன் பிரேமன் இருதய குமார் - கொய்யாத் தோட்டம், யாழ். வீரச்சாவு அடைந்தார். (ஒ-4)


## பட்டதாரிகளை சித்ராலயா
## சிந்தை மகிழ வாழ்த்துகிறது

அரிதின் முயன்று சிரத்தையோடு ஆழமாகக் கற்றுத் தடைகளைத் தாண்டிப் பரீட்சையில் சித்தி பெற்றுப் பட்டதாரிகளாய் சிந்தை மகிழ வெளியே வரும் நம்பியர், நங்கையர்களை நாங்கள் உள்ளன்போடு பாராட்டி வாழ்த்துகிறோம். வாழ்க! வெல்க!

**சித்ராலயா**
18, அர்ச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:
எம்மிடம் மஞ்சள் (Yellow), கறுப்பு (Black), பல்கலைக்கழக மேலங்கிகள் (Cloak) உள்ளன என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம், அத்துடன் Umbrella Flash மூலம் தெளிவான கலர் படங்களும் எடுத்துக் கொடுக்கப்படும்.

(சி-9005)



## யாழ். பல்கலைக்கழக
## பட்டமளிப்பு விழா - 1994

மேற்படி பல்கலைக்கழகத்தில் கல்வியை நிறைவு செய்து பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற பட்டதாரிகளாக வெளியேறி நாட்டுக்கு சேவையாற்ற உள்ள அனைத்து பட்டதாரிகளுக்கும் எமது நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் கூறுகின்றோம்.

**"ஞானம்ஸ் படப்பிடிப்பு கலையகம்**
உங்களை வரவேற்கின்றது"

முக்கிய குறிப்பு:
11 - 09 - 1994 ஞாயிறும் பிற்பகல் 2மணி வரை உங்கள் வசதி கருதி திறக்கப்பட்டு இருக்கும்.

**ஞானம்ஸ் ஸ்ருடியோ**
301, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-9091)



# D. M. I.
## DANIEL MEMORIAL INSTITUTE

233, ஸ்ரான்லி வீதி, (வெலிங்டன் சந்தி)
யாழ்ப்பாணம்.

**A/L95 DAY CLASS**
(A/L 94 பரீட்சை எடுத்த மாணவர்களுக்கானது)

ஆரம்பம்: **12 - 09 - 1994**
திங்கள் காலை 8மணி

கணக்கியல் — D. Sam
வர்த்தகம் — பசில்
பொருளியல் — இராஜேஸ்வரன்
அளவையியல் — சோதிலிங்கம்

★ அனுமதிகளை முன் கூட்டியே பெறவும். காரணம் ஒரு பிரிவு மட்டுமே நடைபெறும்.

நிர்வாகம்.
[32752]


## கிரிக்கெட் வீரர் ரவி சாஸ்திரி ஓய்வு பெறுகிறார்

கொழும்பு, செப். 10

இந்தியாவின் பிரபல கிரிக்கெட் வீரர் ரவி சாஸ்திரி முதல் தர சர்வதேச கிரிக்கெட் விளையாட்டில் இருந்து ஓய்வுபெறப் போவதாக அறிவித்திருக்கிறார்.

32 வயதான இவர் 1980 இல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் முதல் தடவையாக விளையாடினார். இதுவரை 80 டெஸ்ட் போட்டிகளில் இவர் விளையாடியுள்ளார். (ஒ-எ)

## ஒரே பெயரில் பல உறுப்பினர்கள்

கொழும்பு, செப். 10

புதிய நாடாளுமன்றத்தில் பெரேரா என்ற பெயரில் எட்டுப் பேரும் திஸநாயக்கா என்ற பெயரில் ஆறு பேரும் எம். பிக்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஐ-எ-9)

## காலிமுகத்திடல் பண்டா சிலை திருத்தப்படுகிறது

கொழும்பு, செப். 10

கொழும்பு, காலிமுகத்திடலில் உள்ள அமரர் எஸ். டபிள்யு ஆர் டி. பண்டாரநாயக்காவின் சிலை, கடந்த 17 ஆண்டுகளின் பின்னர் புது மெருகூட்டப்பட்டு வருகிறது.

இச் சிலையின் திருத்த வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஒ—எ)

## கூட்டுறவு வைத்தியசாலை சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 10

முளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை (ஞாயிறு) முற்பகல் 9 30 மணிக்கு கூட்டுறவு வைத்தியசாலை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது (ஐ)

## சீமெந்து ஊழியர் சம்பளம்

யாழ்ப்பாணம், செப். 10

லங்கா சீமெந்து நிறுவன ஊழியர்களின் ஆடி, ஆவணி மாதாந்த சம்பளக் கொடுப்பனவு நாளை மறுதினம் திங்கள் யாழ் வர்த்தக வங்கியில் காலை 9மணிமுதல் பிற்பகல் 1மணிவரையில் வழங்கப்படும் என அறிவிக்கப்படுகிறது. (ஒ)

## ரூபவாஹினி தலைவராகவும் லயனல் நியமனம்

கொழும்பு செப் 10

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் தகவல்துறை அமைச்சின் செயலாளர் லயனல் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவராகவும் பணியாற்றி வருகின்றார்.

தமது சம்மதமின்றி தம்மை பற்றிய செய்திகளை வெளியிடக் கூடாதென்று அரசகட்டுப்பாட்டில் உள்ள தகவல் தொடர்புச் சாதனங்களுக்கு இவர் உத்தரவிட்டுள்ளார். [ஒ-எ]


## பாரதி விழா - 1994

காலம்: 1994 – 09 – 11 ஞாயிறு
இடம்: இளங்கலைஞர் மன்றம், நல்லூர்

காலை நிகழ்ச்சிகள்:

9-00
★ தேசியக் கொடியேற்றல்:
திரு. ஜவான் (பொறுப்பாளர், நிதர்சனம்)
★ மங்கல விளக்கேற்றல்:
கவிஞர் புதுவை இரத்தினதுரை (பொறுப்பாளர், கலை பண்பாட்டுக் கழகம்)
★ மௌனாஞ்சலி;
★ தமிழ்த்தாய் வணக்கம்:

9-15 — 9-30
★ தலைமை உரை:
கவிஞர் இ. முருகையன்

9-30 — 11-00
இலக்கிய உரைகள்
★ திரு. இளம்பரிதி, (பொறுப்பாளர், அரசியற்துறை, யாழ். மாவட்டம்)
★ செல்வி. தமிழவள்:
துணைப் பொறுப்பாளர், மகளிர் அமைப்பு
★ பாரதியின் சமூக சீர்திருத்தச் சிந்தனைகள்
திருமதி பி. என், நிலகநாயகம் (மேலதிக அரசாங்க அதிபர், யாழ். மாவட்டம்)
★ 'தமிழ் இலக்கியத்தில் முக்கிய திருப்புமுனையாகப் பாரதி'
செல்வி கலாநிதி சண்முகதாசபிள்ளை (ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி)

11-00 — 12-30
★ கவியரங்கு:
மகுடம் — 'என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்; என்று மடியும் இந்த அடிமையின் மோகம்'

மாலை நிகழ்ச்சிகள்:

5-00 — 6-00
★ மங்கல இசை:

6-00 — 6-30
★ மங்கல விளக்கேற்றல்:
திரு. டொமினிக் (பொறுப்பாளர், தமிழீழ நிர்வாக சேவை
★ மௌனாஞ்சலி:
★ தமிழ்த்தாய் வணக்கமும் பாரதி வாழ்த்தும்:

6-30 — 7-00
தலைமையுரை:
பேராசிரியர் அ. சண்முகதாஸ் (தலைவர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

7-00 — 7-30
'உயிரின் குரல்'
இசை அரங்கம்;
இயல் இசை வடிவம் கவிஞர் என். சண்முகலிங்கன்

7-30 — 8-15
பாரதியின் விடுதலைக் கீதங்கள்:
திரு. பொன். சுந்தரலிங்கம் — பாட்டு

8-15 — 9-00
'சுதந்திர தாகம் - நடன நாடகம்'

9-00 — 10-30
ஒப்பீட்டு உரைக்கோவை
மகுடம் — 'பாரதியின் கவிதையில் விஞ்சி நிற்பது தேச விடுதலை: ஆன்மீக விடுதலை'

10-30 — 12-00
நாடகம்:
பாரதியின் பாஞ்சாலி சபதம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
இவ்வண்ணம்,
விழாக் குழுவினர்.



# BEECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**A/L** கலை, வர்த்தகம்
**DAY CLASS**

★ முழுப்பாடத் திட்டமும் ஆரம்பத்திலிருந்து முழுமையாகக் கற்பிக்கப்படும்.
★ ஒவ்வொரு பாட அலகும் முடிந்தவுடன் பயிற்சிப் பரீட்சை நடைபெறும்.
★ திங்கள். செவ்வாய் வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் காலை 8-00மணிமுதல் பிற்பகல் 1-00 மணிவரை வகுப்புக்கள் நடைபெறும்.
★ மாணவர் சமூகம் நன்கறிந்த எமது வழமையான ஆசிரியர் குழு
★ பாடத்திட்டத்தினை முழுமையாக ஆரம்பத்திலிருந்து கற்க விரும்பும் மாணவர்களுக்காகவே இப் பிரிவு ஆரம்பிக்கப்படுகிறது.
★ மாணவர்கள் முன்கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

**ஆரம்பம்: 29 - 09 - 1994**
வியாழன் 8-00 a. m.
(சி-9151)



## நூல்வெளியீட்டு விழா

நாகர் கோயில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய வரலாறு

காலம்: 11 – 09 – 1994 ஞாயிறு
காலை 10 மணி
இடம்: ஆலய முன்றில்

தலைவர்:
திரு. மு. சிதம்பரப்பிள்ளை
(பரிபாலன சபைத் தலைவரும், நம்பிக்கைப் பொறுப்பாளரும்)

ஆய்வுரை நிகழ்த்துவோர்:
சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்
B A Dip-In Ed.
(விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கலாசாலை)

காரை. செ. சுந்தரம்பிள்ளை
(சிரேஷ்ட விரிவுரையாளர் ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்)

நூல் வெளியீடும் வெளியீட்டுரையும்:
செ. கிருஷ்ணராசா M. A.
(முதுநிலை விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

முதற் பிரதி பெறுபவர்:
திரு. ஆ. அழகுராசா

நூலாசிரியர் பதிலுரை:
திரு. வி. கனகராசா
B. A ஆசிரியர்

★அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம் ★

ஆலய பரிபாலன சபை,
நாகர் கோயில்.
[32788]



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 09 – 10 – 1916
மறைவு: 22 – 08 – 1993

**அமரர் இராசா இராமசாமி**
(இளைப்பாறிய ஆசிரியர்)
வலைாய், அச்சுவேலி

திதி: 10 - 09 - 94

ஆண்டு ஒன்று ஆனாலும் உங்கள் அன்பு நினைவுகள் என்றென்றும் அகலாது நிலைத்திருக்கும் அருபமாய் இருந்தும் எம்மை வழிநடத்திச் செல்லும் எங்கள் அன்புத் தந்தையே! உங்களின் ஆத்ம சாந்திக்காக இறை வனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தற்போதைய முகவரி:
சாந்தன் வீதி,
நீர்வேலி தெற்கு, நீர்வேலி. (32785)



## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்: 10 – 04 – 1968
ஆண்டவன் மடியில்: 10 – 09 – 1984

**சின்னத்தம்பி ஜெயந்திரன்**
(கைதடி மேற்கு)

பண்பிற் சிறந்தவனாய்
அன்பிற்கு இலக்கணமாய்
ஆண்டவனின் அடியவனாய்
உத்தமத்தில் வழிகாட்டியாய்
வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே

உன் நினைவு என்றும் எங்களை விட்டு அகலாது!
அம்மா, அக்கா, அத்தான்,
மாமன்மார், உற்றார், உறவினர்கள்.

சந்தரோவை ...
மாகியப்பிட்டி ... (7749)



**SPOKEN ENGLISH**
With
**GRAMMAR**
திரு. K V. தாசன்
சனி
ஞாயிறு } 4-00
ஆரம்பம்:
10-09 1994
**BOND**
கல்வி நிறுவனம்
58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(7907)



வாழ்த்துபவர்:



**எஸ்-எம்-பெர்னன்டோ**

(சி-9079)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இரண்டு வயது நிரம்பிய பிறவுன் பொமனேரியன் நாய் விற்பனைக்கு உண்டு. R. P. சங்கர், இல. 187, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (32756)

இனவிருத்திக்கேற்ற நான்கு மாதம் நிரம்பிய யமுனாபாரி கடாய்க் குட்டிகளும், பால் எடுக்கும் தாய் ஆடும் விற்பனைக்குண்டு. A. கனகலிங்கம், இல. 214, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (32801)

அலுமாரிகள், சோக்கேஸ், கதிரைகள், டபிள் செற்றிகள், கடை றாக்கை, சாப்பாட்டு மேசை, கதிரைகள், வாங்குகள், கட்டில், பிரம்பு வகைகள் விற்பனைக்குண்டு. ராஜன் பிள்ளை ஆகம், 286, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (வானலி அருகில்) (சி-9049)

எம்மிடம் புத்தம் புதிய இரு மாட்டு வண்டிகள் விற்பனைக்கு உண்டு. ஒன்று பெட்டி வண்டி. ஒன்று தட்டி வண்டி. 17'' ரயர் உள்ளவை. நேரில் பார்வையிடவும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: வேலழகன் காட்வெயர், கன்னாகம். (7632)

ஒன்றரை வயது நிரம்பிய இளப்பு நிற பெண் பொமனேரியன் நாயும், அல்சேசன் நாய்க்குட்டிகளும் விற்பனைக்குண்டு. நடராசா, குலேந்திரன் வீதி, ஆசைப்பிள்ளையின் ஒழுங்கை, பலாலி றோட், கோண்டாவில். (32802)

அடை வைக்கக்கூடிய நல்ல இன கோழி முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (32805)

### அரை பரல் விற்பனைக்கு

வெட்டி, விளிம்புகளை மடித்து, வசதியான கைப்பிடியுடன் வர்ணம் தீட்டப்பெற்று குடிநீர் கொள்கலனாகப் புனரமைக்கப்பெற்ற அரை பரல் விற்பனைக்குண்டு: ''மிக்க் வைற்'' (சி-9092)

### இறைச்சிக் கோழி

புறொயிலர் இறைச்சிக் கோழி புதன், சனி, ஞாயிறு தினங்களில் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். 382, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அறிவகம் அருகில்) (32743)

### மணமகன் தேவை

இந்து கௌரவமான குடும்பத்திலுள்ள 18-12-58 பூரட்டாதி 4ஆம் பாதம், 6இல் செவ்வாய் உள்ள B. A. டிப்ளோமா ஆசிரியைக்கு அரச உத்தியோகத்திலுள்ள மணமகன் தேவை. அபிராமி, துர்க்காதேவி தேவஸ்தான பின் வீதி, சாவகச்சேரி. (32732)

கௌரவமான குடும்பத்து அழகும் குணமும் உள்ள B. A. பட்டதாரி 20-2-1966 சதயம் 2ஆம் பாதம், 5இல் செவ்வாயுள்ள மணமகளுக்கு கௌரவமான குடும்பத்தில் உள்ள அரச உத்தியோக மணமகன் தேவை தொடர்பு கொள்க. அபிராமி, துர்க்கா தேவி தேவஸ்தான பின் வீதி, சாவகச்சேரி. (32730)

இந்து கௌரவமான குடும்பத்திலுள்ள 25-9-1960 விசாகம், 1ஆம் பாதம், 12இல் செவ்வாய் உள்ள B. Sc. ஆசிரியைக்கு அரச உத்தியோகத்தில் உள்ள மணமகன் தேவை. தொடர்பு: அபிராமி திருமண சேவை நிலையம், துர்க்கா தேவி தேவஸ்தான பின் வீதி, சாவகச்சேரி (32731)

இந்து கௌரவமான குடும்பத்திலுள்ள 15-1-1962 பரணி 3ஆம் பாதம், 1இல் செவ்வாயுள்ள B. Sc. ஆசிரியைக்கு இந்து கௌரவமான குடும்பத்திலுள்ள அரச உத்தியோகமுள்ள மணமகன் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்க. தொடர்பு: அபிராமி திருமண சேவை நிலையம், துர்க்கா தேவி தேவஸ்தான பின் வீதி, சாவகச்சேரி. (32739)

### மணமகள் தேவை

40 வயதுடைய, செவ்வாய்க் குற்றம், படித்த மணமகனுக்கு படித்த நற்குணமுள்ள மணமகள் தேவை. அற்றோனிக்கல் படித்தவர்; எல்லா மதத்தவர்க்கும் செய்து தரப்படும். புகைப்படம் குறிப்புடன் தொடர்புகொள்ளவும்: எஞ்ஜினியர், அக்கவுண்டன் உண்டு. விலாசம்: துர்க்கா திருமண சேவை, வளர்மதி இல்லம், கே.கே.எஸ். றோட், மல்லாகம். (7630)

### அனாதைப் பெண் தேவை

கோயில் தொண்டு செய்ய ஒரு அனாதைப் பெண் தேவை. உணவு, உடை, உறைவிடம், உதவிப்பணம் வழங்கப்படும். நேரில் வரவும்: வே. பாலசுந்தரம் இளைப்பாறிய அதிபர், கோண்டாவில் இந்து மகாவித்தியாலத்திற்கு அருகில். (32748)

### புறொயிலர் குஞ்சுகள்

Prima, Broiler பிறிமா, புறொயிலர் ஐந்து நாள் கோழிக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ''மல்லிகாபதி'' சந்தை இழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (32738)

### மணிக்கூடு திருத்துதல்

சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் குறைந்த செலவில் திருத்திக்கொடுக்கப்படும். உதிரிப்பாகங்களுக்காக மணிக்கூடுகள் வாங்கப்படும். குடும்பஅட்டையுடன் வரவும். சகல மணிக்கூடு பற்றறிகளும் உண்டு. சஜன்ஸ் வாச் வேக்ஸ், 12, புகையிரத நிலைய வீதி, சுன்னாகம் சந்திக்கருகில். (7629)

### அனுமதிப் பரீட்சை

ஆண்டு - 6 மாணவர்களை பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கான பரீட்சைக்குரிய பயிற்சி வினாத்தாள்கள் (கணிதம், தமிழ், ஆங்கிலம்) ஒவ்வொரு ஞாயிறும் எம்மால் வெளிவிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்திக்கொடுக்கப்படும். Bond, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (7744)

### மணப்பெண்கள் தேவை

வயது 43, தனியார் உத்தியோகத்தருக்கு ஏதாவதொரு குறைபாடுள்ள, கருப்பை உட்பட, சேவையுள்ளம் கொண்ட மணமகள் மறுமணத்திற்கும், வயது 41, வர்த்தக உத்தியோகத்தருக்கு தொழிலுள்ள மணமகளும் தேவை. வெளிநாட்டு பிரயாண வசதியுண்டு. முழுவிபரத்துடனும் ஜாதகத்துடனும் உரியவர் மட்டும் புதன் கிழமைக்குள் கிடைக்க விண்ணப்பிக்கவும். இல. 689, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (32786)

### இறைச்சிக் கோழி

சகல இன இறைச்சிக்கோழிகள் தினமும் காலை 7-00 தொடக்கம் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (32804)

### ஆனந்தம தயாரிப்புக்கள்

சத் - சித் ஆனந்தம் சத்தாக இருக்கும் உண்மை பொருளை எமது சித்தத்தால் - அறிந்தால் கிடைப்பது எமக்கு பேரானந்தம். அதை போல ஆனந்தம் சீயாக்காய் பவுடர், ஆனந்தம் அம்மாரி அப்பளம் பாவித்தால் ஆனந்தம் அடைவீர்கள். கேட்டு வாங்குங்கள். ஆனந்தம். (சி-9036)

### மணமகன் தேவை

39 வயது, இந்து, மகம், B. Com. ஆசிரியைக்கு தகுந்த மணமகன் தேவை. கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்: இல. 691, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (32787)

### மணிக்கூடுகள்

உங்கள் பாவித்த நல்ல நிலையில் உள்ள மணிக்கூடுகள் உதிரிப் பாகத்திற்காக விற்று நீங்கள் விரும்பும் நிலையில் உள்ள வேறு மணிக்கூடுகள் மாற்றிப் பெற்றுக் கொள்ளலாம். சகல மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக் கொள்ளலாம்: டிலக்ஸ் வாச் அன் றேடியோ வேக்ஸ், ஆரியகுளம் சந்தி (வானலி அருகில்), யாழ்ப்பாணம். (சி-9042)

## 'A' LEVEL CENTRE

1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பம்

க. பொ. த. உயர்தரம்
(94 A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு உரியது)

**ஆரம்பம்: 10-09-1994 (இன்று)**
SAT. 6 - 15 SAT & SUN

| | |
|---|---|
| இரசாயனவியல் | — Mr. நாகரட்ணம் B.Sc. |
| பௌதிகவியல் | — Mr. ஜெயசீலன் B.Sc. |
| தூய/பிரயோககணிதம் | — Mr. நித்தியானந்தன் B.Sc |
| தாவரவியல் | — பிரபல ஆசிரியர் |
| விலங்கியல் | — Mr. ஞானேந்திரன் Dip-Sc |

● மேலும் விபரங்களுக்கு நேரில்

(சி-9081)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 26 — 08 — 1947

உதிர்வு: 25 — 08 — 1990

### அமரர் ஏரம்பு துரைராசா
(கிராம சேவையாளர்)

ஆண்டு நான்கு கழிந்ததண்ணா
ஆனாலும் மனம் தவிக்குதண்ணா
நம்ப முடியவில்லை அண்ணா
நாங்கள் பிரிந்து விட்டோம் என்பதனை
அம்மாவை விட்டு ஒரு கணமும்
பிரியாத நீங்கள் இன்று ஆண்டு பல
சென்றும் திரும்பாததேனோ.

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

4ஆம் வட்டாரம்,
மண்கும்பான்.

## "ஓசை"
## மலர் வெளியீட்டு விழா

நல்லூர் விஞ்ஞானக் கல்வி நிலைய
1994 ஆம் ஆண்டின் O/L பருவ மாணவர்களால்
ஆக்கப்பெற்ற

**ஓசை**

மலர் வெளியீட்டு விழா நடைபெற
திருவருள் கூடியுள்ளதை மகிழ்வுடன்
அறியத்தருகின்றோம்.

இடம்: நாவலர் கலாசார மண்டபம்
நல்லூர்

காலம்: **11 - 09 - 1994** (ஞாயிறு)
மாலை 3-30 மணி

சிறப்பு நிகழ்ச்சி:
ஈழத்தின் புகழ்பூத்த மெல்லிசை பாடகர்கள்
இணைந்து வழங்கும்


**இன்னிசை கானங்கள்**

அனைவரையும் அன்புக்கரம் நீட்டி
அழைக்கின்றனர்.

விஞ்ஞானக் கல்வி நிலையம்,
நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்.

(32800)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 01 — 07 — 1978

மறைவு: 21 — 09 — 1993

### செல்வன் குமாரகுலசிங்கம் சிவகுமாரன்
(யாழ். மத்திய கல்லூரி மாணவன்)

திதி: 10 — 09 — 1994

சிரித்துக் கதைபேசிச்
சிந்தனையைத் தூண்டி நிதம்
கலகலப்பாய் வாழ்ந்திருந்த
கண்மணியே சிவகுமாரா
உன்னை பிழந்து
ஓராண்டு கழிந்ததடா — எங்கள்
எண்ணத் திரையில் — நீ
என்றுமே வாழ்ந்திருப்பாய்

உன் பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா, அக்காமார்,
அண்ணன், மைத்துனர்கள்
மருமக்கள்.

கனையாணி வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

(32790)

## 8 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



உதயம்: 08 — 10 — 1979

மறைவு: 02 — 09 — 1994

### செல்வி சிந்துஜா ஸ்ரீ ஜெயகுமார்
(பழைய மாணவி - யாழ். இந்து மகளிர் கல்லூரி)

42/6, சிவகுருநாதர் வீதி, நீராவியடியைச் சேர்ந்த காங்கேசன்துறை வைத்திய அதிகாரி ஸ்ரீ ஜெயகுமார், இடைக்காட்டைச் சேர்ந்த அனந்தலக்ஷ்மி ஆகியோரின் சிரேஷ்ட புதல்வி 'சிந்துஜா' தென் ஆபிரிக்காவில் (TRANSKI - R. S. A.) காலமாகிவிட்டார்.

இவர் ஆர்த்தி (பழைய மாணவி, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை)யின் ஏக சகோதரியுமாவார்.

இவருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்!

திரு. சு. சிதம்பரப்பிள்ளை.
(பேரன்)
இளைப்பாறிய தபால் அதிபர்,
இடைக்காடு, அச்சுவேலி,

42/6, சிவகுருநாதர் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

(32794)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## ஒய்யாரக் கொண்டை?

வடக்கு - கிழக்கில் இயல்பு நிலைமை உருவாக்குவதற்கும், பாதிப்படைந்த பகுதிகளைப் புனருத்தாரணம் செய்வதற்கு மென பிரதமர் சந்திரிகா தலைமையில் ஐந்து அமைச்சர்கள் கொண்ட உயர்மட்ட செயலூக்கக் குழு ஒன்றை அரசாங்கம் அமைத்துள்ளது.

வடக்கு - கிழக்கு மக்களின் வாழ்க்கை நலன்களில் புதிய அரசாங்கம் அக்கறை காட்டத் தொடங்கியுள்ளது என்பதற்கான சொல் சார்ந்த செய்தி இது. இது வடிவ பணிகள் செயலூக்கம் பெற்று நடைமுறையில் வந்து, தமிழர்களின் அவலங்களும், கஷ்டங்களும் எப்போது நீங்கும் என்பதனைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

அந்தச் செய்தி ஒரு பக்கமிருக்க —

வடமராட்சிக் கடலில் நேற்று முன்தினம் கடற்படையினர் மிக மோசமாகத் தாக்குதல்களை நடத்தினர் என்றும் —

அந்தத் தாக்குதல்களினால் தொழில் செய்து கொண்டிருந்த மீனவர் ஒருவர் படுகாயம் அடைந்தார்; பீரங்கிக் குண்டுகளினால் குடியிருப்புகள் சேதமடைந்தன; மீனவர்களின் தொழில் உபகரணங்களான வள்ளங்கள், கட்டுமரங்கள் சேதம் அடைந்தன என்றும் —

பூநகரி கல்முனைக் கடற்பகுதியில் கடந்த திங்கட்கிழமை இரவு தொழிலுக்குச் சென்ற இருவர் கடற்படையினர் அன்று மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த, சடலங்கள் (சூட்டுக் காயங்களுடன்) மீட்கப்பட்டன என்றும் — செய்திகள் வெளியாகி உள்ளன.

தமிழர்களின் வாழ்க்கை இயல்பு நிலைக்குத் திரும்ப வேண்டும் என்று அரசு ஆர்வம் கொண்டிருப்பது — நாணயத்தின் ஒருபக்கம் என்றால் —

அவர்களைத் தமது சீவனோபாயத்திற்காக தொழில் செய்யவிடாது தாக்குவதும், கொல்லுவதும் குடியிருப்புகளைச் சேதப்படுத்துவதும் மற்றப்பக்கமாகும்.

இரண்டாவது பக்கம் முதற் பக்கத்துக்கு முற்றிலும் முரணானதும் வித்தியாசமானதுமாகும்.

இங்கே சாமி விடைகொடுத்தாலும் பூசாரி விடை கொடாத நிலையே தெரிகின்றது. பொருளாதாரத் தடை நீக்கம், மின்சாரம் போன்ற வசதிகளைச் செய்வதால் மட்டும் வடக்கு - கிழக்கில் இயல்பு நிலை உருவாகமாட்டாது என்பதனை அரசுக்கு இடித்துரைப்பது போல படையினரின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன!

தமிழ்ப் பகுதிகளில் இயல்பு நிலை திரும்ப வேண்டுமானால், மக்கள் தமது தொழில்களை அச்சமின்றியும், உயிராபத்து இன்றியும் செய்வதற்கும், அன்றாடத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு வேண்டிய இடத்துக்குச் சென்று வரவும், தமது வீடுகளில் நிம்மதியாகப் படுத்துறங்குவதற்கும் வழி பிறக்க வேண்டும்.

இத்தகைய ஒரு சூழ்நிலை உருவாகுவதற்கு தமிழ் மக்கள் மீது விதிக்கப்பட்டுள்ள போக்குவரத்துத் தடை, கடல்வலயத்தடை உட்பட்ட சகல தடைகளும் நீக்கப்பட வேண்டும். படையினர் தமிழர்களுக்குத் தரும் துன்பதுயரங்கள் நிறுத்தப்பட வேண்டும். யுத்த நிறுத்தம் அமுலுக்குக் கொண்டு வரப்பட வேண்டும். அதற்கு முன்னர் இயல்பு நிலையை உருவாக்குவது வெறும் வாய் வேதாந்தமாகவே இருக்கும். அரசு ஒன்றைச் சொல்ல, படையினர் அதற்கு முற்றிலும் முரணாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் நிலையே தொடரும்.

எனவே தமிழ் மக்கள் மீதான சகல தடைகளையும் நீக்கி, யுத்த நிறுத்தத்தை உடனடியாக அமுலுக்குக் கொண்டு வருவதற்குப் பிரதமர் சந்திரிகா நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படிச் செய்யத் தவறின் செயலூக்கக் குழு போன்ற ஏற்பாடுகள், ஒய்யாரக் கொண்டையாம் தாழம் பூவாம்! அதன் உள்ளே இருப்பதுவோ ஈரும் பேனும் என்ற பாடலாகிவிடும்!

# ஆயுதப்படைக்கு ஆள் திரட்டும் நடவடிக்கைகள் தொடர்கின்றன

கொழும்பு, செப். 10

ஆயுதப்படைக்கு ஆட்திரட்டும் வேலைகள் தொடர்ந்து இடம்பெறுவதாக ஐலண்ட் நாளிதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

இராணுவ விசேட படையினர் படையணியில் ஒரு பிரிவான உள்ள கொமாண்டோ றெஜிமென்டில் சேர்ந்து கொள்ளப் படுவதற்காக கூடுதலான இளைஞர்களைத் திரட்டுவதற்காக வெணுமுல்லை இராணுவ முகாமில் கடந்த புதன்கிழமை நேர்முகப்பரீட்சைகள் இடம்பெற்றன.

கொமாண்டோ றெஜிமென்டுக்காக மேலும் இளைஞர்களைத் திரட்டுவதற்கான இரு நேர்முகப் பரீட்சைகளில் ஒன்று நேற்று கண்டியில் உள்ள இரண்டாவது சிங்க தொண்டர் படைத் தலைமையகத்தில் நடைபெறவிருந்தது.

இன்னொரு நேர்முகப் பரீட்சை எதிர்வரும் திங்கட்கிழமை சாலியபுரா ஜயா முகாமில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

நிரந்தர இராணுவத்துக்கு கடேற் அதிகாரிகளை சேர்ப்பதும் திட்டமிடப்பட்டபடி இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான விண்ணப்பங்களை இராணுவத் தலைமையகம் கடந்த 5 ஆம் திகதிவரை ஏற்றது.

இதேவேளை —

கடற்படைத் தொண்டர் படைக்கு லெப்டினன்டுகளையும் சப்-லெப்டினன்டுகளையும் புதிதாகச் சேர்ப்பதற்கு கடற்படைத் தலைமைப் பீடமும் திட்டமிட்டுள்ளது.

திட்டமிட்டபடி இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பது தொடருகிறது என்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும் — ஆயுதங்கள், வெடிப்பொருள்கள் மற்றும் போர்த் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதில் பாரிய மாற்றங்கள் ஏற்பட முடியும் என்றும் இந்த இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

(இ-எ)

## சந்திரிகாவுக்கு ஆலோசகர்கள்

கொழும்பு, செப். 10

பிரதமர் சந்திரிகாவின் வெளியுறவு ஆலோசகராக திரு. ஜெயநாத் ராஜபக்ஷாவும் —

பாதுகாப்பு ஆலோசகராக முன்னாள் பொலிஸ்மா அதிபர் சிறில் ஹேரத்தும் —

பொருளாதார ஆலோசகராக டாக்டர் லால் ஜெயவர்த்தனாவும் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

### சுன்னாகம்

## மின்சக்தி நிலையத்தை திருத்த வெளிநாட்டு உதவி

செயலிழந்து போய் இருக்கும் சுன்னாகம் மின்சக்தி நிலையத்தை வெளிநாட்டு உதவியுடன் திருத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாக பிரதி பாதுகாப்பு அமைச்சர் வேணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு இயன்றவரை விரைவில் மின்சாரம் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது என்றும் அவர் தெரிவித்தார். (இ-க9-)

### சுவாமி விவேகானந்தர்

## சிகாகோ பேருரை நினைவு கவிதைப் போட்டி முடிவு

கொழும்பு, செ. 10

சுவாமி விவேகானந்தர் சிகாகோப் பேருரை நூற்றாண்டுக்காக கொழும்புத் தமிழ்ச் சங்கம் கடந்த ஆண்டு நடத்திய அனைத்திலங்கைக் கவிதைத் தேர்வுப் பரிசில்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி மாலை கொழும்பு ஸ்ரீ இராமகிருஷ்ண மிசன் மண்டபத்தில் வழங்கப்படும்.

பரிசில் விவரம் வருமாறு:

வளர்ந்தோர் கவிதைத் தேர்வுப் பரிசில்கள்:

முதற் பரிசு பண்டிதர் மு. கந்தையா, ஏழாலை. இரண்டாம் பரிசு பண்டிதர் க. த. ஞானப்பிரகாசம் கொடிகாமம். மூன்றாம் பரிசு பண்டிதர் க. ஆறுமுகம் பண்ணாகம்.

மாணவர் கவிதைத் தேர்வுப் பரிசில்கள்:

முதற் பரிசு செல்வன் சந்திரசேகரன் சசிதரன் வந்தாறுமூலை மமவி. இரண்டாம் பரிசு செல்வன் இராசரத்தினம் முரளீசுவரன் புனித மைக்கேல் கல்லூரி, மூன்றாம் பரிசு செல்வன் யோகராசா சிவகரன் யாழ். இந்துக் கல்லூரி.

பொன். சிவானந்தன்; அதிபர் காரைதீவு விக்னேசுவர வித்தியாலயம், செ. குணரத்தினம் மட்டக்களப்பு, மா. பஞ்சலோகரஞ்சன் ஆனைக்கோட்டை ஆகியோர் வளர்ந்த கவிதைத் திறமைச் சான்றிதழ்கள் பெறுபவர்கள் ஆவர்.

செல்வன் ச. முகுந்தன் யாழ் இந்துக்கல்லூரி, செல்வன் ம. நிரோக்குமார் கல்முனை கார்மேல் பாத்திமாக் கல்லூரி, செல்வி ச. பிரேமினி சாவகச்சேரி இந்துக் கல்லூரி, செல்வி இ. ஆரோக்கியநாயகி பருத்தித்துறை பெண்கள் உயர் பாடசாலை ஆகியோர் மாணவர் கவிதைத் திறமைச் சான்றிதழ்களைப் பெறுபவர்கள் ஆவர். (க)

## டி.பி. பதவியிலிருக்கும்வரை ஒதுங்கி வாழ கூரே முடிவு

கொழும்பு, செப். 10

தற்போதைய ஜனாதிபதி விஜேதுங்காவின் பதவிக் காலம் முடிவடைந்தபின்னரே தாம் ஐக்கிய தேசியக் கட்சியில் மீண்டும் சேர்ந்து தீவிரமாகச் செயல்படப் போவதாக முன்னாள் அமைச்சர் சிறிசேனகூரே தெரிவித்திருக்கிறார்.

"நான் ஐ.தே.க. பொதுச் செயலாளராக இருந்திருப்பின் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு போட்டி ஏற்படவிட்டிருக்கமாட்டேன் எப்படியாவது ரணிலை எதிர்க்கட்சித் தலைவராக்கி இருப்பேன்" — என்று திரு கூரே தமது நண்பர்களிடம் தெரிவித்தார். (இ-எ)

### ஐ. தே. க. தோல்வி பற்றிய

## சிறிசேன கூரேயின் கூற்றை காமினி கண்டிக்கிறார்

கொழும்பு, செப். 10

ஜனாதிபதி விஜேதுங்கா நடந்து கொண்ட விதத்தினால்தான் கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வி அடைந்தது என்று முன்னாள் அமைச்சர் சிறிசேனகூரே தெரிவித்ததை எதிர்க்கட்சித் தலைவர் காமினிதிஸநாயக்கா கண்டித்துள்ளார்.

தேர்தல் பிரசாரத்தின் போது நாட்டைவிட்டு வெளியே சென்ற ஒருவரின் இக் கண்டனத்தை திறந்த மனதுடன் அலசி ஆராயும்படி காமினி திஸநாயக்கா தமது கட்சியினரைக் கேட்டுள்ளார்.

பிரேமதாஸாவின் கொள்கையை ஏற்றுக்கொள்ளும் கூரேயினால் விஜேதுங்காவின் ஜனநாயகக் கொள்கையை ஏற்றுக்கொள்ளமுடியாமல் உள்ளது குறித்து ஆச்சரியப்படத் தேவை இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## அதிகாரம் அமைதியாக கைமாறியது ஒரு வெற்றி

### நாடாளுமன்றத்தில் ஹமீத்

கொழும்பு, செப். 10

"சமீபத்தில் தேர்தலை வெற்றிகரமாக நடத்தி முடித்தன. அதிகாரம் அமைதி பூர்வமாகக் கைமாறியிருக்கிறது. இதுவே ஒரு பெரும் வெற்றியாகும்."

நாடாளுமன்றத்தில் அக்கிராசனப் பிரேரணை மீது உரை நிகழ்த்திய நாடாளுமன்ற உறுப்பினர் ஹமீத் இவ்வாறு கூறினார்.

### கணனி இலத்திரனியல் - மனையியல்:

## வட இலங்கை தொழில்நுட்ப கல்லூரியில் கண்காட்சி

வட இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியின் கணனி இலத்திரனியல், மனையியல் கண்காட்சி நேற்றுக் காலை டாக்டர் ரி. டபிள்யூ. ஜெயகுலராஜாவினால் திறந்து வைக்கப்பட்டது.

வட இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியின் நிர்வாக இயக்குநர் திரு. ரி. ஞானசீலன் தலைமையில் நடைபெற்ற இது தொடர்பான வைபவத்தில், டாக்டர் ஜெயகுலராஜாவும், வைத்திய கலாநிதி எஸ். பி. ஆர். சிரீமாறனும் மங்கல விளக்கேற்றினர்.

யாழ். ஆஸ்பத்திரி வீதி சென் பீற்றர்ஸ் லேனில் அமைந்துள்ள இத்தொழில் நுட்பக் கல்லூரியில் இன்று முழு நாளும் கண்காட்சி இடம் பெறும்.

இக் கண்காட்சியில் விஞ்ஞானம், கணனிப் பகுதி ரயிலைக் கட்டுப்படுத்தும் கணனி ரோபோ இயந்திரங்கள், இலத்திரனியல் மற்றும் தலை அலங்காரம், கேக் ஐசிங், பூவேலைகள், துணி அலங்காரம் உட்பட பல்வேறு அம்சங்கள் இடம் பெற்றுள்ளன. (இ)

### ஆலயங்களில்

எழுதுமட்டுவாழ் மருதங்குளம் விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று (சனி) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

★ ★ ★

சாவகச்சேரி டச்சு வீதி அருள்மிகு செருக்கப்பதி சித்திவிநாயகர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவ விழா இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. இரதோற்சவம் 18 ஆம் திகதியும், தீர்த்தோற்சவம் 19 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

### மனையியல் கண்காட்சி

மனித முன்னேற்ற நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட மனையியல் கண்காட்சி இன்று முதல் 4 நாட்களுக்கு பிரதான வீதியில் உள்ள மறைக்கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி செல்வி ஜோன். பேர்கின்ஸ் இன்று கண்காட்சியை திறந்து வைப்பார். (ஐ-3)

### விளையாட்டு நிகழ்வுகள்

யாழ் மிட்ரவுன் றோட்டறிக் கிண்ணத்துக்காக யாழ் மிட்ரவுன் றோட்டறிக் கழகம் நடத்தும் 6 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்றும் நாளை ஞாயிற்றுக் கிழமையும் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 8-30 மணி முதல் நடைபெறவுள்ளது. (ஐ-20)

### இன்று

பெரிய பனை சுரபி சனசமூக நிலையத்தில் இன்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் சுகாதாரக்கருத்தரங்கும் தொழுநோய் ஆய்வும் இடம் பெறும்.

வட பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கருத்தரங்கு வடபிராந்திய தொழுநோய்க் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் திரு. மு. குணரட்ணம் தலைமையில் நடைபெறும். (ஒ-4)

★ ★ ★

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தின் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நிலைய மைதானத்தில் நடைபெறும்.

யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கத் தலைவர் திரு ந. பாலவிநாயகர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஒ 17

### பாரதி விழா

சாவகச்சேரி நகரசபை சனசமூக நிலையங்களின் சமாசம் நடத்தும் பாரதி விழா இன்று காலை சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (ஒ-117)

★ ★ ★

கோப்பாய்புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் இன்று சனிக்கிழமை பாரதி விழா நடைபெறும். (ஒ-173)

★ ★ ★

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையம் நடத்தும் பாரதிவிழா இன்று மாலை 6.30 மணிக்கு நிலைய அரங்கில் நடைபெறும் (ஒ-17)

### புலிகளின் குரல் வானொலியில்

10 – 09 – 1994

சனி இரவு

★ 8-01 — அறிவித்தலசம்
★ 8-10 — நிகழ்வும் பகிர்வும்
★ 8-25 — நேயர் கடிதங்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — சித்திரம் —"சுதந்திரப் பசுவைக் கண் போற்றிக் காப்போம்"

11 – 09 – 1994

ஞாயிறு காலை

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — களத்தில் மாவீரர் நினைவு
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — களத்தில் மாவீரர் நினைவு நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

## அனுரா மீண்டும் சு.கவுக்கு தாவுவார்?

கொழும்பு, செப். 10

ஐ.தே.க. தேசியப்பட்டியல் எம்.பியாக உள்ள அனுரா பண்டாரநாயக்கா மீண்டும் சுதந்திரக்கட்சியில் சேரப்போவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பலத்த வதந்தி அடிபடுகிறது.

திரு பண்டாரநாயக்கா கடந்தமூன்றாம்திகதி வெளிநாடு பயணமானார். இம்மாதக் கடைசியில் நாடுதிரும்புவார். அதன் பின்னரே அவர் சுதந்திரக்கட்சியில் சேரவுள்ளார் என்று சில வட்டாரங்கள் தெரிவித்தன.

அனுராவுக்கு நெருங்கியவர்கள் மீண்டும் சுதந்திரக்கட்சியில் சேரும்படி அவருக்கு ஆலோசனை கூறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அனுராவுக்கு நெருங்கிய வட்டாரங்களை மேற்கோள் காட்டி இத் தகவலை ஐலண்ட் வெளியிட்டிருக்கிறது. (ஒ-எ)

### நரோமா பயணிகளுக்கு

யாழ்ப்பாணம், செப். 10

நாளை ஞாயிறு இடம்பெறும் நரோமா கப்பல் சேவையில் பயணம் செய்யலாம். செயலகத்தில் பணம் செலுத்தியவர்களை நாளை காலை 8 மணிக்கு பருத்தித்துறை துறைமுகத்தில் சமுகமளிக்குமாறு யாழ் ... அதிபர் ... கேட்டுள்ளார். (ஐ)

யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
THE JAFFNA EDUCATION CENTRE
(சாந்தி சினிமா முன்பாக)
வகு. 4 - 10, O/L
SPOKEN ENGLISH
SHORT-HAND TYPING
இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.
புதிய பிரிவுகள்
ஆரம்பம்: 12-09-1994
[7905] — நிர்வாகி.

பாட வகுப்புகளும் + மீட்டல் வகுப்புகளும்
ஆரம்பம்: 10-09-94 (சனி)
A/L 95 சனி - ஞாயிறு
(ஒரு வருடகால பிரிவுகள்)

| | | |
|---|---|---|
| 7-00 | தூயகணிதம் | திரு. முருகையா |
| 8-00 | பிரயோககணிதம் | திரு. முருகையா |
| 8-00 | இரசாயனவியல் | திரு. சிவசோதி |
| 9-00 | இரசாயனவியல் மீட்டல் | திரு. சிவசோதி |
| 10-00 | இரசாயனவியல் | திரு. சிவசோதி |
| 11-00 | பௌதிகவியல் மீட்டல் | திரு. ஜெயசீலன் |
| 12-00 | இரசாயனவியல் மீட்டல் | திரு. சிவசோதி |
| 1-00 | இரசாயனவியல் | திரு. சிவசோதி |
| 2-00 | விலங்கியல் மீட்டல் | திரு. ஞானேந்திரன் |
| 3-00 | தாவரவியல் மீட்டல் | திரு. ஈசன் |
| 3-00 | இரசாயனவியல் | திரு. சிவசோதி |
| 4-00 | இரசாயனவியல் மீட்டல் | திரு. சிவசோதி |

★ மாணவர் வசதிகருதி வகுப்புகள் வெவ்வேறு பிரிவுகளாகப் பட்டுள்ளன. மாணவர் தாம் விரும்பிய ஏதாவதொரு பிரிவில் இணைந்து முழுப்பாடத் திட்டத்தையும் தெளிவாக, பூரணமாக கற்கலாம்.

BOND கல்வி நிறுவனம்
58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[7906]

சா. யோசவ் வாஸ் முனிவர் விழா
மானிப்பாய் மறைக் கோட்டம்

1995 ஆம் ஆண்டு தை மாதம் 25 ஆம் திகதி கொழும்பில் நிகழவிருக்கும் பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் வருகையின் போது இடம் பெறவிருக்கும் ஆசாரசித்திகுரிய யோசவ்வாஸ் அடிகளின் முத்திப்பேறு நிலையை முன்னிட்டு மானிப்பாய் மறைக்கோட்ட ஆசரவில் நடத்தப்படும் கண்காட்சியும் கலை நிகழ்ச்சிகளும் (பொம்மலாட்டம், ஒளிப்படக்காட்சி நாட்டுக்கூத்து) நேற்று ஆரம்பமான இந்நிகழ்வுகள் தொடர்ந்து இன்றும் (10 - 09 - 1994) இடம்பெறும்.

இடம்
புனித அந்தோனியார் ஆலயம் மானிப்பாய்
நாட்டுக்கூத்து
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி

★ மாணவர்களால் வழங்கப்படும் ஆசாரத்திற்குரிய யோசவ் வாஸ் அடிகளின் வாழ்க்கை வரலாறு பற்றிய நாட்டுக்கூத்து இன்று மாலை புனித அந்தோனியார் ஆலய முன்றலில் மாலை 7-00 மணிக்கு இடம்பெறும்

வாழ்த்துக்கள்:
மானிப்பாய் மறைக்கோட்டத்தில் இடம்பெறும் ஆசாரத்திற்குரிய
யோசவ் வாஸ் முனிவரின்
விழாவை
உளமார வாழ்த்துபவர்கள்

வே சி. கணபதிப்பிள்ளை
மானிப்பாய்.
குலம் கிறீம் ஹவுஸ்
ஆலடிச்சந்தி, மானிப்பாய்.
மனோ அம்பிஸ் அழகுசாதன விற்பனைக் களஞ்சியம்
மானிப்பாய்.
வே சி. ம. களஞ்சியம்
ஆலடிச் சந்தி, மானிப்பாய்
சுந்தர்சன்
மார்க்கெற் முன்பாக, மானிப்பாய்.
ராஜன் சைக்கிள் ஸ்ரோர்
மானிப்பாய்.
ஜெகபதி சையலகம்
அந்தோனியார் கோவிலடி, மானிப்பாய்
மானிப்பாய் கோவில் பற்று வர்த்தகர் சங்கம்
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
மானிப்பாய்.

தொகுப்பு:
மானிப்பாய்
மறைக்கோட்ட குருக்கள்.
[32807]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாபெரும் மாட்டுவண்டி சவாரிப் போட்டி

யாழ். நகர் நவீன சந்தையில் அமைந்துள்ள

**லிங்கம் பட்டு அகம்
சோதி புடைவை அகம்** இணைந்த ஆதரவில்

ஆவரங்கால் விவசாயிகள் ஒருங்கிணைந்து நடத்தும்

4 ஆவது மாபெரும் மாட்டுவண்டி சவாரிப் போட்டி

இடம்:- ஆவரங்கால் சவாரித்திடல்

காலம்:- 11-09-1994 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2. மணி

போட்டிகள்:- A, B, C என மூன்று பிரிவுகளாக நடத்தப்படும்

★ கைக் கொடி சவாரியும் இடம்பெறும்.

★ தங்கப்பதக்கம் உட்பட பல பெறுமதி மிக்க பரிசில்கள் ஒவ்வொரு பிரிவிலும் முதல் நான்கு இடங்களுக்கும் வழங்கப்படும்.

(32783)


# மரண அறிவித்தல்கள்

## முருகேசு சிவசுப்பிரமணியம்

(ஓய்வு பெற்ற கணக்காளர், வைத்திலிங்கம் கம்பனி, கொழும்பு)

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட மு. சிவசுப்பிரமணியம் 6 ஆம் திகதி கண்டியில் காலமானார். இவர் காலம் சென்ற தர்மநாயகியின் அன்புக் கணவரும், மணிவண்ணன், கருணைவண்ணன், ராஜவண்ணன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் இன்று கொழும்பில் நடைபெறும்.

தகவல்:
இ. மகேந்திரன்
(அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி)

(32813)

திருமதி

## தெய்வானைப்பிள்ளை சுந்தரம்பிள்ளை

உடுப்பராய் கிழக்கைச் சேர்ந்த திருமதி தெய்வானைப்பிள்ளை சுந்தரம்பிள்ளை [காலஞ்சென்ற நல்லதம்பி - தங்கமுத்துவின் சிரேஷ்ட புத்திரி] அவர்கள் 5-09-94 இல் சிவபதமடைந்துவிட்டார்.

இவர் திருமதி பார்வதிப்பிள்ளை தேவராஜா, காலஞ்சென்றவர்களான சந்தையா, சண்முகநாதன் ஆகியோரின் அன்பு சகோதரியும், நாகலிங்கம், திருமதி ஈஸ்வரி, பஞ்சலிங்கம், திருமதி சற்குணேஸ்வரி, செல்வி மகேஸ்வரி ஆகியோரின் அன்புத்தாயாரும், சாவித்திரி, காலஞ்சென்ற கணேசமூர்த்தி, புஸ்பவதி, திருச்செல்வம் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஸ்ரீவிக்கினேஸ்வரன், வரதன், கண்ணன், சிவகாமி, பரவதி, திருமகள் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று சனிக்கிழமை (10-09-94) முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ஈஸ்வரி கணேசமூர்த்தி (மகள்)

அரச வீதி,
உடுப்பராய் கிழக்கு.

(32799)

## சின்னத்தம்பி சோமசுந்தரம்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் மானிப்பாய் கனகசபை வீதியைச் சேர்ந்தவருமான சின்னத்தம்பி சோமசுந்தரம் [உரிமையாளர் ரவீந்திரா கபே, சுன்னாகம்] காலமாகிவிட்டார்.

இவர் நல்லம்மாவின் அன்புக் கணவரும், ரவீந்திரகுமாரி, ரவீந்திரன், ரவிச்சந்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும், கந்தையா, பூரணம் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற பரராஜசிங்கம், சரோஜினிதேவி, இந்திராணி, திருநீலகண்டன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 10-9-94 சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் என அனைவர்க்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
ரவீந்திரகுமாரி
ரவிச்சந்திரா

கனகசபை வீதி,
மானிப்பாய்

சி/5720)

## வேலுப்பிள்ளைப்பத்தர் கதிரவேலு

சொர்ணவடலி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலைச் சேர்ந்த வேலுப்பிள்ளைப்பத்தர் கதிரவேலு நேற்று சிவபதமடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற வேலுப்பிள்ளைப்பத்தர்— அன்னம்மாவின் அன்பு மகனும், சண்முகம் — சிதாலட்சுமியின் மருமகனும், நாகபூசணியின் (வேவி) அன்புக் கணவரும், தயாபரன் (சுவிஸ்), குணாபரன், சுமதி (கனடா), கீதாஞ்சலி, சுநந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிறீதரனின் (கனடா) அன்பு மாமனாரும், கமலாதேவி, தெய்வயானை, சொர்ணலிங்கம், லிங்கதேவி, காலஞ்சென்றவர்களான சாந்தலிங்கம், மருதலிங்கம், ரதிதேவி ஆகியோரின் சகோதரரும், கண்ணுத்துரை, சிவசுப்பிரமணியம், ஆனந்தராசா, பாக்கியலட்சுமி, வசந்தகுமாரி கமலாதேவி, தேவிகா, சூரியகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனருமாவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (10-09-94) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும், ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குணாபரன் (மகன்)

சொர்ணவடலி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

[32812]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 392/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 10-09-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


## ஆணைக்குழு சட்டம் திருத்தப்படும்

ஆணைக்குழுக்களை நியமிக்க பிரதமருக்கு அதிகாரம் வழங்கக் கூடியதாக ஆணைக்குழுச் சட்டத்தைத் திருத்துவது என்று அரசு தீர்மானித்துள்ளது.

விரைவில் திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று நீதி அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் செய்தியாளர்களிடம் கூறினார்.

1988 முதல் இதுவரை இடம்பெற்ற அரசியல் கொலைகள் குறித்து விசாரணை நடத்த நாட்டை மூன்று வலயங்களாக பிரித்து ஆணைக்குழுக்களை நியமிக்கும் அரசின் ஆலோசனைக்கு ஜனாதிபதி அனுமதி அளிக்க மறுத்து விட்டதை தொடர்ந்தே அரசு இந்த மாற்று நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார். (இ-ஏ-6)

## கப்டன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வணக்கக் கூட்டம் இடம் பெறும்.

பின்னர் உருவப்படம் கண்டி வீதி வழியாக கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதி இராணுவ மரியாதைகளுடன் அங்கு நினைவுக்கல் நடப்படும். [இ-ஐ]

## இராணுவச்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிய முறையீட்டைத் தொடர்ந்தே இவ்விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த அதிகாரிகள் தங்களின் நிலைப்பாட்டை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் தலைவர்களுக்கு விளக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் இராணுவத் தளபதியும் தற்போது தாய்லந்தில் இலங்கைத் தூதராக உள்ள ஜெனரல் சிசில் வைத்தியரத்னாவுக்கு நெருங்கிய சகாக்கள் என்று கருதப்படும் இந்த அதிகாரிகளின் வாக்குமூலங்களை இரகசியப் பொலிஸார் பதிவு செய்யவுள்ளனர்.

தேர்தல் தினத்துக்கு முன்பதாக கொழும்பு வந்த ஜெனரல் வைத்தியரத்னாவை இந்த அதிகாரிகள் சந்தித்த பேசியதை அடுத்தே சதி முயற்சி பற்றி தகவல் பரவ ஆரம்பித்தது.

இச்சதி முயற்சியை முறியடித்ததாகக் கூறும் இராணுவ அதிகாரிகளின் வாக்குமூலங்களும் இரகசியப் பொலிஸாரால் பதிவு செய்யப்படவுள்ளன.

இதனிடையில் — ஜெனரல் வைத்தியரத்ன, வெளியுறவு அமைச்சுக்கு தெரியாமலே கொழும்பு வந்தார் என்று வெளியுறவு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன

இவ்வாரம் ஆரம்பமாக உள்ள இவ்விசாரணையின் முடிவில் அறிக்கை ஒன்று ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஓ-எ)

## கோமாரியில் மீறு வருகிறது; கிலோ 7 ரூபாவுக்கு விற்பனை

யாழ்ப்பாணம், செப். 10 பருத்தித்துறையில் பொருள்களை இறக்கிவிட்டு நேற்று திருகோணமலைக்கு சென்ற 'கோமாரி' கப்பல் 3 ஆயிரம் மெற்றிக் தொன் மாவை ஏற்றிக்கொண்டு இன்னும் ஐந்து நாட்களில் இங்கு வரவிருக்கிறது.

இக்கப்பலில் எடுத்து வரப்படும் மா பொதுமக்களுக்கு கிலோ 7 ரூபா வீதம் விற்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. [ஓ-8]

## வெளியார் தலையீடின்றி இனப்பிரச்சினை தீர்வு

### காமினி கூறுகிறார்

கொழும்பு, செப். 10 இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண எடுக்கப்படும் எதிர்கால முயற்சிகளில் வெளிநாட்டுச் சக்திகளை நாம் சம்பந்தப்படுத்தக்கூடாது.

எதிர்க்கட்சித் தலைவர் காமினி திஸநாயக்கா முன்கண்டவாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் பேசிய போது அவர் இக்கருத்தை வெளியிட்டார். (இ-எ)

## மட்டக்களப்பு இணைப்பு அதிகாரி தப்பி ஓட்டம்?

கொழும்பு, செப். 10 மட்டக்களப்பு மாவட்ட இணைப்பு அதிகாரியாகக் கடமையாற்றி வந்த சிரேஷ்ட பொலிஸ் அதிபர் டக்ளஸ் பெரேரா நாட்டை விட்டுச் சென்று விட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்யாவில் கல்வி பயின்று வரும் தமது மகனைப் பார்க்கச் செல்வதாக அவர் தமது நண்பர்களிடம் கூறியிருந்தார்.

இரு வாரங்களுக்கு முன்னர் அவர் வெளிநாடு சென்றார் என தெரிவிக்கப்பட்டது.

அவருக்கு பதிலாக பொலிஸ் அதிபர் உபாலி ஹேவகே கடமையாற்றுகின்றார்.

## விமான விபத்தில் 131 பேர் பலி

அமெரிக்க விமான சேவைக்குச் சொந்தமான போயிங் 703 பயணிகள் விமானம் ஒன்று நேற்று செங்குத்தாக விழுந்து நொருங்கியது.

அதில் பயணம் செய்த 131 பேரும் உயிரிழந்தனர். ஒருவராவது உயிர் தப்பவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

சிக்காகோவில் இருந்து புறப்பட்ட சிறிது நேரத்தில் இந்த விபத்து இடம்பெற்றது. (இ-ஐ)

## அகதி முகாம்கள் புனரமைப்பு

சம்மாந்துறை பிரதேசத்தில் உள்ள வாரத்தி, துணைவி நீதிவான் வளவு ஆகிய இடம் பெயர்ந்தோர் அகதி முகாம்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. (ஓ-17)

## 642 மாணவருக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டமும், 3 பேருக்கு முது மெய்யியல்மாணிப்பட்டமும், 5 பேருக்கு முது கலைமாணிப்பட்டமும், 102 பேருக்கு கல்வியின் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ்களும் 7 பேருக்கு ஆங்கிலமொழி கற்பித்தலில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

30 மாணவர்களுக்கு பரீட்சையில் திறமையுடன் சித்தியடைந்து பட்டம் பெற்றமைக்கான பரிசில்களும் புலமைப் பரிசில்களும் வழங்கப்பட உள்ளன.

இதற்கென கலைப்பீடத்திலிருந்து 17 பேரும் மருத்துவ பீடத்திலிருந்து 4 பேரும் விஞ்ஞான பீடத்திலிருந்து 9 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பல்கலைக்கழக பரிசில்கள் 20 பேருக்கும் வழங்கப்படும்.

இதில் கலைப்பீடத்தில் இந்து நாகரிகத்தை சிறப்புப் பாடமாகக் கற்ற மாணவி செல்வி. சுகந்தினி பொன்னம்பலம் புலமைப் பரிசில்களும் மற்றும் பரிசில்களுமாக ஐந்து பரிசில்களைப் பெறுகின்றார். (ஓ-4)

## நெடுங்கேணி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குலசிங்கா பதவியா— வெலிஓயா பிராந்தியத்தில் அமைக்கப்பட்டுள்ள இராணுவச் சாவடிகளில் ஒன்றான பிலெஸ்கொட்டுவசாவடி மீது விடுதலைப்புலிகள் இத்தாக்குதலை நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சமாதானப் பேச்சுகளை நடத்த பிரதமர் சந்திரிகாவும் விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனும் விருப்பம் தெரிவித்த பின்னர் கொல்லப்பட்ட முதாவது சிப்பாய் இவர் தான் என்று தஜலண்ட் செய்தியில் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை— சிறு அளவிலான இராணுவ நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்வது என விடுதலைப் புலிகளும் ஆயுதப்படையினரும் தீர்மானித்துள்ளனர் போல் தெரிவதாக பாதுகாப்பு பகுப்பாய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். [இ-எ]


# தமிழீழத்தில் இன்று (10-09-1994) மங்களகரமான ஆரம்பம்

காலை 8-34 - 8-59

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

# தேனமுதம் குளிர் ஊற்று

452, கேணல் கிட்டு சாலை, (ஆஸ்பத்திரி வீதி), யாழ்ப்பாணம்.



∘ சர்பத் ∘ நெல்லிக்கிறஷ் மற்றும் குளிர்பானங்களுக்கும்

○ மட்டன்றோல் ○ பற்றிஸ் ○ கட்லட் ○ மஸ்கட் ○ சுவீற்ஸ் வகைகளுக்கும்

● மீன் பிரியாணி ● கோழிப்பிரியாணி

பிறந்தநாள் - திருமண வைபவங்களுக்கு தேவையான பட்டர்கேக், றிச்கேக், சொக்லெட்கேக் வகைகளை "ஐஸிங்" செய்து பெற்றுக்கொள்ளலாம்.

[32795]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுவேலி புனித தெரேசாள் ம. கல்லூரி

## கலை நிகழ்ச்சிகள் ஒத்திவைப்பு அறிவித்தல்

இன்று (10-09-94) நடைபெறவிருந்த அபிவிருத்தி நிதி தொடர்பான "கலை நிகழ்ச்சிகள்" தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்பதனை மனவருத்தத்துடன் அறியத் தருகிறேன்.

கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

மேரி எத்தல்வீவா. A. C.
அதிபர்

(32810)

## யா/கனகரத்தினம் ம. ம. வித்தியாலய ஆண்டுப் பொதுக்கூட்டம்

11-09-94இல் நடைபெற இருந்த பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களினால் பின்போடப்பட்டுள்ளது. புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

குறிப்பு: அங்கத்தவர்கள் இவ்வாண்டுக்கு உரிய சந்தாவைச் செலுத்திப் புதுப்பித்துக் கொள்ளவும்.

பொ. தர்மேந்திரன்,
செயலாளர்.

(32796)

## 'குற்றக் கூண்டிலே பாரதி'

09-09-1994 இல் (நேற்று) வழக்கு விசாரணை 12-09-1994 இல், 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டப் படிப்புகள் நிறுவனத்தில் இடம்பெறும்.

ஜெயராஜ் அணி
எதிர்
குமாரவேலு அணி

(இ-9096)

## மிட் - ரவுண் கிண்ணத்துக்கான

ஆறு பேர் ஐந்து ஓவர்கள் கொண்ட

# கிரிக்கெட் சுற்றுப் போட்டி

யாழ். மிட் - ரவுண் றோற்றறக்ற் கழகம்




ஆதரவில்

யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் செப். 10ஆம், 11ஆம் திகதிகளில் இன்றும் நாளையும் காலை 8-30 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

அனைத்து ஆர்வலர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்

செயல்திட்ட இயக்குநர்

(இ-9089)

## 18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 30 — 05 — 1914



இறப்பு: 30 — 08 — 1976

### அமரர் இ. செல்லையா

(ஸ்தாபகர், சன்லைற் றைக்கிளினேர்ஸ்)

ஆண்டு பதினெட்டு ஆகியும் ஆறாதய்யா எம்மனம்
நீர் காட்டிய பாதையிலே நாம் வாழ்ந்து
நீர் தேடிய புகழினை நாம் காத்து
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

30/3, மருதடி வீதி,
நல்லூர்.

(இ/9093)